வலர் திரையப்பபிள்ளையின்
யாழ்ப்பாணம் அன்றும் இன்றும்

473.P/954.9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

பாவலர்
தெ. அ. துரையப்பாபிள்ளை
நினைவுப் பேருரை. — 6.

பாவலர் துரையப்பாபிள்ளையின்

# யாழ்ப்பாணம் — அன்றும் இன்றும்

— மீள்பார்வை

பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை
Ph. D. (Cey.) D. Phil. (oxcn.)
தமிழ்த்துறைத் தலைவர்,
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,
யாழ்ப்பாணம்.

மகாஜனக் கல்லூரி,
தெல்லிப்பழை.
1986-06-24.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2
954.93

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாவலர் துரையப்பாபிள்ளையின்
# யாழ்ப்பாணம் — அன்றும் இன்றும்
## — மீள்பார்வை

1907 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் வெளியான 'Ceylon National Review' இதழில், பாவலர் தெ. அ. துரையப்பாபிள்ளை விரிவுரை ஒன்று பிரசுரிக்கப்பட்டிருந்தது. 'Jaffna - Past and Present' என்ற தலைப்பிலான அந்த விரிவுரை சிந்தனையை மிகவும் தூண்டுவது. 1910 இல் பாவலர் தெல்லிப்பளையிலே மகாஜனக் கல்லூரியை நிறுவினார். தெல்லிப்பளையிற் பிறந்த பாவலர் மிஷனரிப் பாடசாலையான யாழ்ப்பாணக் கல்லூரியிற் கற்றுத் தம்முடைய சொந்தக் கிராமத்திலேயே மிஷனரிப் பாடசாலையில் ஆசிரியராகத் தொழிலை ஆரம்பித்தார். கிறீத்தவராக இருந்த அவர் இந்துவாக மாறி, இந்து நிறுவனமான மகாஜனக் கல்லூரியை நிறுவினார். அவர் ஆறுமுகநாவலருடைய இலட்சியங்களாற் கவரப்பட்டாரென்பதில் ஐயமில்லை. அவருடன் சமகாலத்தவராக இருந்த சுப்பிரமணிய பாரதியின் கருத்துக்கள் சில பாவலரது கருத்துக்களாகவும் காணப்படுகின்றன. இந்தியச் சீர்திருத்த இயக்கங்களின் செல்வாக்கும் பாவலரிலே காணப்படுகின்றன.

1960 இல் வெளியான மகாஜனக் கல்லூரிப் பொன் விழா மலரில், பாவலரின் கட்டுரை மறுபிரசுரம் செய்யப்பட்டுள்ளது. முதலாவது பிரசுரத்தின் பின் அரை நூற்றாண்டுக்கு மேலே கடந்துவிட்டபோதும், கட்டுரை அதே வடிவத்தில் மறுபிரசுரமானது, அறுபதுகளிலும் அக்கட்டுரைக்குத் தேவையிருந்ததாகக் கருதப்பட்டதைக் காட்டுகிறது. இரண்டாவது பிரசுரத்தின் பின்னும் இப்பொழுது கால்நூற்றாண்டு கழிந்துவிட்டது. கட்டுரை இன்றும் மிகவும் பயனுள்ளதாகக் காணப்படுவதனால், கட்டுரையாளருடைய முக்கியமான கருத்துக்களை, மேற்கோள்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளாகத் தந்து, தேவையான இடங்களிலும் வசதியான இடங்களிலும் குறிப்புக்களைக் கூறுவதே, எம்முடைய அணுகுமுறையாக அமையும்;

முதலிலே, யாழ்ப்பாணம் பாவலருக்கு எவ்வாறு தோன்றியதென நோக்குவோம்:

1. ஒரு நாட்டின் பழைமையென்பது பழைய காலத்தில் அந் நாட்டில் இடம்பெற்ற முக்கிய நிகழ்ச்சிகளின் குறிப்பேட்டாகும்; வீரச்சாகசங்கள், ஞானச்சிகரங்கள். செயற்கருஞ் செயல்கள் கொண்ட புகழ்மிக்க பாரம்பரியமாகப் பழைமையைக் கொள்ளும் மக்களுக்குப் பெருந்தூண்டுதலாக, நாட்டின் பழைமை நாகரிகமடைந்த நாடுகள் பலவற்றிலே காணப்படுகிறது.

2. யாழ்ப்பாணக் குடாநாடு மிகச் சிறிய தேசமாக இருக்கின்ற போதிலும் யாழ்ப்பாணத்தவர் தமது தேசம்.........

3. வேறுபல நாடுகளின் தொல்வரலாற்றைப்போல, யாழ்ப்பாணத்தின் தொல்வரலாறும் தெளிவு சிறிதுமற்றும் நிச்சயமற்றும் காணப்படுவதோடு, முக்கியமாக மிகவும் பழையகால வரலாறு மறைபொருளாயும் உள்ளமையால்...

4. யாழ்ப்பாணத்தவராகிய நாம் வெவ்வேறான சமய நம்பிக்கைகள் உள்ளவராக இருக்கலாம்; ஆனால் இன ஒற்றுமை, மொழி ஒற்றுமை, அரசியல் நோக்கிலும் சமுதாய முன்னேற்றத்திலும் ஒற்றுமை என்பவற்றில் நாம் பிரிக்க முடியாதபடி இணைந்துள்ளோம். நாங்கள் யாவரும் தமிழ்த் தேசிய இனத்தின் அலகுகள். ஒரே நாட்டில் ஒன்றாக வாழும் நாம் வாழ்க்கைப் பெரும் போரில் எங்களுடைய பொதுநன்மைக்காக இணைந்து போராடவேண்டும்.

5. எங்களுடைய இனத்தின் தனித்தன்மையை வளர்த்துக் கொள்வதனால் மட்டுமே அழகியதும் சர்வதேசப் புகழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றதுமான இந்தத் தீவில் வாழும் பேறு பெற்ற சமூகங்களுள் ஒரு கௌரவமான இடத்தை நாங்கள் பெற்றுக்கொள்ள இயலும்.

பாவலர் மிகுந்த அரசியல் தொலைநோக்கு உள்ளவராகக் காணப்படுகிறார். சுதந்திர காலத்துக்கு முன்பு வாழ்ந்த தமிழ்த் தலைவர்கள் இலங்கைத் தமிழ்த் தேசிய இனத்தைப்பற்றிச் சிந்தித்து, ஆங்கிலேயர் இந்தத் தீவை விட்டு வெளியேற முன்பு தக்க அரசியற் கோரிக்கைகளை முன்வைக்கத் தவறியமை இலங்கைக்குப் பெரிய துரதிட்டமாகும். ஆங்கிலேயர் இலங்கைக்குச் சுதந்திரம் வழங்கிய போது இங்கு விட்டுச்சென்ற ஒற்றையாட்சி முறை முழுக்க முழுக்கப் பெரும்பான்மைச் சமூகத்தினரின் ஆட்சியாகவே தொழிற்படுகிறது. சமத்துவமும் சுயமரியாதையும் பெற்றுக்கொள்வதற்காகச் சிறுபான்மைச் சமூகத்தவர் முன்வைக்கும் அரசியற் கோரிக்கைகள் பெரும்பான்மைச் சமூகத் தலைவர்களாலே வெறுப்புடனும் கோபத்துடனும் நிராகரிக்கப்படுகின்றன. இந்தத் தீவின் முக்கியமான அரசியற் கட்சிகள் பெரும்பான்மைச் சமூகத்தின் ஆதரவை இலகுவில் பெற்றுக்கொள்வதற்குத் தமிழர் பிரச்சினையைத் 'தூண்டி'லாகப் பயன்படுத்துகின்றன. இலங்கையின் இன்றைய அரசியல் நிலைமை எல்லாருக்கும் நன்கு தெரியுமாதலால், அது இங்கு விரிவாகக் கூறப்படவேண்டியதில்லை.

''ஈழம்'' என்ற சொல் இன்று பிரபலமாகியுள்ளது. பாவலர் இந்தச் சொல்லைப் பயன்படுத்தவில்லை. அவர் யாழ்ப்பாணம் என்பதையே தேசப் பெயராக வழங்குகிறார். யாழ்ப்பாணம் என்பதும் யாழ்ப்பாணக் குடாநாடு என்பதும் ஒன்று என்பதுபோல ஓரிடத்திலே அவர் குறிப்பிட்டுள்ளார். இலங்கைத் தமிழர்களின் பாரம்பரியத் தாயகத்திலே யாழ்ப்பாணக் குடாநாடு ஒரு சிறு பகுதியேயாயினும், இக்குடாநாடே முற்கால யாழ்ப்பாணத் தமிழ்இராச்சியத்தின் கேந்திர பூமியும், மிகவும் அடர்த்தியான சனத்தொகை உள்ளதும் கல்வியிலே மிகவும் அபிவிருத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யடைந்துள்ளதுமாகும். யாழ்ப்பாணம், யாழ்ப்பாணத்தவர் என்ற சொற்களுக்குக் குறுகிய பொருள்களும் உண்டாயினும், இலங்கையிலுள்ள பிற சமூகத்தவர்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கிய பிரதேசத்தை யாழ்ப்பாணம் எனவும் இலங்கைத் தமிழர்களை யாழ்ப்பாணத்தவர் எனவும் ஏகதேசமாக வழங்குவதை இன்றுங் காணலாம்.

தமிழ் இனம் தனித் தேசிய இனமாக அங்கீகரிக்கப்பட்டு, கூட்டாட்சி அமைப்பின்கீழ்த் தமிழ் அரசு ஒன்று நிறுவப்படவேண்டுமென்று அரசியற் கோரிக்கையை முன்வைத்த தமிழ்த் தலைவர்கள் பாவலரின் மாணவர்களாக அமைந்தமை தற்செயலாக நடந்த காரியமன்று. தெல்லிப்பழை மிஷன் பாடசாலையிலே, திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் பாவலரின் மாணவராக இருந்துள்ளார். மகாஜனக் கல்லூரிப் பொன்விழா மலர் பழைய மாணவர் என்று குறிப்பிட்டு, திரு கு. வன்னியசிங்கம் அவர்களின் படத்தைப் பிரசுரித்துள்ளது. துரதிட்டவசமாக, கூட்டாட்சி முறைக்கான கோரிக்கை காலந்தாழ்ந் பிந்தியே முன்வைக்கப்பட்டது. சுதந்திரம் கிடைக்குமுன்பு இந்தக் கோரிக்கை தமிழ்த் தலைவர்களால் முன்வைக்கப்பட்டிருந்தால், இன்றைய இலங்கை வரலாறு அண்மைக் காலத்தில் இருந்ததிலும் மிகவும் வேறுபட்டு அமைந்திருக்கலாம்.

யாழ்ப்பாண வரலாறு பற்றிய பாவலரின் கருத்துக்களை இனி நோக்கலாம்.

1. இன்று கிடைக்கும் வரலாற்று மூலாதாரங்கள் அவை குறிக்கும் வரலாற்று நிகழ்ச்சிகள் நிகழ்ந்து நீண்ட காலத்தின்பின் குறித்து வைக்கப்பட்டவை,

2. தொடக்க காலத்திலே, யாழ்ப்பாணம் நான் முன்பு பெயர் குறிப்பிட்ட முக்குவச் சிற்றரசர்களாலே ஆளப்பட்டதாகத் தோன்றுகிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

3. யாழ்பாடி இறந்தபின், குடாநாட்டை ஆண்ட சிங்களவர் தமிழரைத் துன்புறுத்தியதனுல், பெருந்தொகையானோர் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறினர்.

4. சிங்கையாரியன் அழைப்பின்பேரில், எங்களுடைய முன்னோராகிய பிரபுக் குடும்பங்கள் அடிமைகளோடும் குடிமைகளோடும் இந்த நாட்டிலே வந்து குடியேறினர்.

5. பதினேழு ஆண்டுகள் விசயவாகு என்னும் சிங்கள மன்னனின் கொடுங்கோலாட்சி யாழ்ப்பாணத்தில் நிலவியது; சிங்களவருடைய வழிபாடுகளையும் பழக்கவழக்கங்களையும் ஏற்கும்படி தமிழர் துன்புறுத்தப்பட்டனர்.

6. தென்னிந்தியாவிலிருந்து வந்தவர்களெனக் கூறப்படும் சில குடும்பங்களின் தூய்மையையும் உயர்வையும் பற்றி வீண் இடாம்பம் அடிப்பதே நாம் தொன்மையைப் போற்றும் முறை என்பதை நாம் மனந்திறந்து கூறவேண்டியிருக்கிறது. யாழ்ப்பாணத்தை ஆண்ட தமிழ் மன்னர்களின் வீரம், அவர்கள் செய்த நற்காரியங்கள் அவர்களுட் பெரும்பாலோர் நடத்திய நல்லாட்சி முதலியவற்றைப் பற்றி வேண்டிய அளவு, நாம் பெருமைப்படுவதில்லை. சாதி, குடும்பம் என்பன தொடர்பாக, எமது முன்னோரை வியந்துரைத்தல் மட்டுமே எமது பேச்சாக அமைகிறது.

*அன்றைய யாழ்ப்பாணத்தைப் பற்றிக் கூற வந்த பாவலர், யாழ்ப்பாண வரலாற்றை மேலோட்டமாகக் கூற வேண்டியவராகிறுர். யாழ்ப்பாண வரலாற்று மூலாதாரங்களைப்பற்றி அவர் அன்று கூறியது இன்றும் ஏற்கக்கூடியதாகவேயுள்ளது. இலங்கை வரலாற்றை முழுவதாக நோக்கி எழுதும் அறிஞர் பலர் யாழ்ப்பாண வரலாற்றின் முக்கியத்துவத்தைக் குறைத்தும் தமிழர் பங்களிப்பைக் குறைத்தும் எழுதியுள்ளமையை அவதானிக்கலாம். இன்றைய இலங்கை அரசியல் நிலைமை இலங்கை வரலாற்றைப் பெரும்பான்மைச் சமூகத்தின் வரலாருகத் திரித்துக் கூறு*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறு தொல்லியலார் சிலரையும் வரலாற்றாசிரியர் சிலரை யும் தூண்டியிருக்கிறது. இந்த நோக்கு இலங்கைத் தமிழருக் கான வரலாற்று உரிமைகளைத் தொடர்ந்து மறுத்து வரு வதற்கு அரசியல் தலைவர்களுக்கு வாய்ப்பாக அமையும். சிங்களவர் வரலாறே இலங்கை வரலாறு என்று காட்டு வதற்கும் 'மகாவம்ச மனப்போக்கு' என்று பொதுவாகக் குறிக்கப்படும் ஆதிபத்திய நோக்கு வளர்த்துவரப்படுகிறது. இந்த நோக்கு பாடசாலைப் பாடப் புத்தகங்களிலே புகுத்தப் படுவதால், பல இன மக்கள் வாழும் நாட்டில் எல்லா இனங் களும் எதிர்காலத்திலே சமத்துவமாக இணைந்து வாழும் இயல்பு வரவரக் குறைந்து வருகிறதென்றே கூறவேண்டும்.

பாவலர் எடுத்துக்காட்டிய யாழ்ப்பாண வரலாற்றின் மேலோட்டமான வெளித்தோற்றம் இன்னும் பெரிய அள வில் மாற்றமடையவில்லை. ஆனால் கடந்த எண்பது ஆண்டு களிலே, யாழ்ப்பாண வரலாறு பல முன்னேற்றங்களைக் கண்டுள்ளதென்பதை இவ்விடத்திலே கூறத்தான் வேண்டும். முதலியார் சி. இராசநாயகம் 1926 ஆம் ஆண்டிலே 'Ancient Jaffna' என்ற நூலை வெளியிட்டார். சுவாமி ஞானப்பிரகாசர் 1928ஆம் ஆண்டிலே 'யாழ்ப்பாண வைபவ விமர்சனம்' பிரசுரித்தார். அவருடைய 'Sources for the History of Jaffna' என்ற கட்டுரை, அவர் இறந்தபின்பு 1953 ஆம் ஆண்டு 'Tamil Culture' இரண்டாவது மலரில் வெளியாயிற்று. சி. எஸ் நவரத்தினம் என்பவர், 'Tamils and Ceylon' (1958), Vanni and the Vanniyars (1960), 'A Short History of Hinduism in Ceylon' (1964) என மூன்று நூல்களை எழுதியுள்ளார்.

இலங்கைத் தமிழர் வரலாற்றுக்கு, அண்மையிலே பங் களிப்புச் செய்தவர்களாக சி. பத்மநாதன், கா. இந்திர பாலா, செ. குணசிங்கம், சி. க. சிற்றம்பலம், பொ. இரகு பதி, ஆ. வேலுப்பிள்ளை என்போரைக் குறிப்பிடலாம். 'இலங்கையிலே திராவிடர் குடியேற்றங்களும் யாழ்ப்பாண அரசின் தோற்றமும்' என்ற தலைப்பிலே கலாநிதிப் பட்டத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக்கான தம்முடைய ஆராய்ச்சிக் கட்டுரையை எழுதிய இந்திரபாலா 'சிந்தனை' என்ற சஞ்சிகையிலும், 'Epigraphia Tamilica' என்ற சஞ்சிகையிலும் பல தமிழ்ச் சாசனங்களைப் பதிப்பித்துள்ளார். திருகோணமலை மாவட்டத்திலே தம்முடைய கவனத்தைப் பதித்த குணசிங்கம் 'கோணேஸ்வரம்' (1973) என்ற நூலை வெளியிட்டதோடு, அம்பாவட்டத்துத் தமிழ்ச் சாசனங்கள் சிலவற்றையும் பதிப்பித்துள்ளார். பெருந்தொகையான இலங்கைத் தமிழ்ச் சாசனங்களை இரண்டு நூல்களில் (1971, 1972) வேலுப்பிள்ளை வெளியிட்டுள்ளார். யாழ்ப்பாண அரசின் முற்பகுதி வரலாற்றைத் தம்முடைய கலாநிதிப் பட்ட ஆய்வுக் கட்டுரைக்குப் பொருளாகக் கொண்ட பத்மநாதன் மேலே குறிப்பிட்ட ஆய்வுகளையும் பயன்படுத்தி 'The Kingdom of Jaffna' (1978) என்ற நூலை வெளியிட்டார். இவருடைய நூல் வெளிவந்தபின்பு, சிற்றம்பலமும் இரகுபதியும் தொல்லியற் கோணத்திலிருந்து இலங்கைத் தமிழர் குடியிருப்புகளைக் கலாநிதிப் பட்டங்களுக்கான ஆய்வுக் கட்டுரைகளுக்குப் பொருள்களாகக் கொள்வதன்மூலம், புதிய செய்திகளை வெளிக் கொண்டுவந்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தின் மிகவும் தொன்மைக்கால மன்னர் முக்குவச் சிற்றரசராக இருந்திருக்கலாம். பண்டைக் காலச் சேரநாட்டின் ஒரு பகுதியான வடகேரளத்து மீனவர் சாதியைச் சேர்ந்தவர்களாக இவர்களைக் கொள்ளவேண்டும். 'Tamil Culture in Ceylon' என்ற தம்முடைய நூலிலே எம். டி. இராகவன் யாழ்ப்பாணத்துத் தமிழர் பண்பாட்டிலே மிகவும் ஆழமான கேரளச் செல்வாக்குக் காணப்படுவதை எடுத்துக்காட்டியுள்ளார். மலையாளக் கிளைமொழிகளிலே கேரளத்து வடஎல்லையிலுள்ள கிளைமொழியே யாழ்ப்பாணத் தமிழை அதிகம் ஒத்துக் காணப்படுவதை மலையாளத்துக்கும் கேரளப் பண்பாட்டுக்குமான முதலாவது உலக மகாநாட்டிலே வாசிக்கப்பட்டதும் இதுவரை அச்சாகாததுமான 'Commonness between Malayalam and Jaffna Dialect of Tamil' என்ற கட்டுரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிலே நாம் எடுத்துக்காட்டியுள்ளோம். கோவலனார் கதை/கண்ணகி வழக்குரை/சிலம்பு கூறல் என வழங்கும் காவியத்திலும் வெடியரசன் நாடகத்திலும் குறிப்பிடப்படும் வெடியரசன், விளங்குதேவன், வீரநாராயணன் முதலிய முக்குவச் சிற்றரசர்களின் பெயர்கள் பல நூறாண்டுகளுக்கு அல்லது சில ஆயிரமாண்டுகளுக்கு முன்பு யாழ்ப்பாணத்தின் பகுதிகளிலே ஆதிக்கஞ் செலுத்திய உண்மையான மனிதர்களைச் சுட்டுவனவாகலாம்.

சிங்களவர் யாழ்ப்பாணத் தமிழர்களை இரண்டுமுறை ஒடுக்கியதைப் பாவலர் குறிப்பிடுகிறார். மிக நீண்டகாலத்துக்குமுன், யாழ்ப்பாடி இறந்தபின்பு, முதலாவது ஒடுக்குமுறை நிகழ்ந்ததாகக் கூறப்பட்டுள்ளது. தமிழர்களுட் பெரும்பாலோர் யாழ்ப்பாணத்தைவிட்டோடியதாகக் கூறப்படுகிறது. இன்றும் அதே வரலாறு திரும்பவும் நடைபெறுகிறது. ஓர் இலட்சத்துக்கு மேற்பட்ட தமிழர்கள் தமிழ்நாட்டுக்கு அகதிகளாகப் போய்விட்டார்கள். சுமார் அறுபதினாயிரம்பேர் மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகளாகப் போயிருக்கிறார்கள். அவுஸ்திரேலியா, கனடா முதலிய நாடுகளுக்குத் தப்பியோடப் பல்லாயிரக்கணக்கானோர் முயன்றுகொண்டிருக்கும்போதும், அந்த நாடுகள் தயக்கங்காட்டுவதனால், காரியம் தாமதமாகிக்கொண்டிருக்கிறது. கூலிவேலையென்றாலும் பரவாயில்லையென்று மத்திய கிழக்கு நாடுகளுக்குப் பெருந்தொகையானோர் போய்க்கொண்டிருக்கின்றனர். சிங்களவர் ஆட்சியிலே பதினேழு ஆண்டுகள் தமிழர்கள் பட்டபாடு யாழ்ப்பாணவைபவமாலையைத் தழுவியே பாவலரால் கூறப்பட்டுள்ளது. இலங்கை வரலாற்றைக் கூறும் பிற சான்றுதாரங்களை யாழ்ப்பாண வரலாற்றோடு இணைத்துப் பார்க்கும்போது, கி. பி. 1450 வரையிலே, ஜெயவர்த்தனபுரக் கோட்டையிலிருந்து ஆண்ட ஆறாம் பராக்கிரமபாகு, சபுமால் குமரையா எனவும் வழங்கப்பட்ட செண்பகப்பெருமாள் தலைமையிலே படையை அனுப்பி யாழ்ப்பாண அரசைக் கைப்பற்றினான். கி. பி. 1250 க்கும் கி. பி. 1815க்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடையே, முழு இலங்கையும் ஒரே ஆட்சியின்கீழ் அமைந்தது. அந்த ஒரு காலத்தில் (1450 — 1467) மட்டுமே ஆங்கிலேயர் ஆட்சி முழு இலங்கையிலும் ஏற்பட்ட பின்பும், சுமார் இருபது ஆண்டுகள் இலங்கைத் தமிழர் பிரதேசம் தனிப் பிரதேசமாக ஆளப்பட்டுவந்தது. அதன் பின்பே, நிர்வாக வசதி கருதி முழு இலங்கைத்தீவும் ஒருவகை ஒற்றையாட்சி முறையின்கீழ்க் கொண்டுவரப் பட்டது.

மேற்குறிப்பிட்ட பதினேழு ஆண்டுகளிலே, தமிழர் ஒடுக்கப்பட்டனர் என்ற குறிப்பை நம்புவது கஷ்டமாக இருக்கிறது. பராக்கிரமபாகு சிங்கள பௌத்தனாகக் கணிக்கப்பட்டுச் சிங்கள பௌத்தர்களாற் போற்றிப் புகழப் பட்டுள்ளபோதிலும், அவனுடைய அரசவையிலே தமிழ்ச் செல்வாக்கு மிகவும் உயர்ந்து காணப்படுகிறது. அந்த மன்னனுடைய ஒரே மகள் உலகுடையா(ள்) என்றும் அவள் கணவன் நன்னூர்த்துணையா(ர்) என்றும் பெயர் பெற்றிருந்தனர். செண்பகப்பெருமாளும் கேரளத்திலிருந்து வந்த பரம்பரையைச் சேர்ந்தவன். எனவே, சிங்களப் பிரதேசங்களிலே தமிழர் ஆட்சிசெய்வதை விரும்பாத மகாவம்சம் முதலிய சிங்களக் கால ஏடுகள் தமிழ்மன்னர்கள் சிலரைக் கொடுங்கோலர்களாகச் சித்திரித்துள்ளது போல, யாழ்ப்பாணத்திலே சிங்கள மேலாதிக்கம் நிலவியதை விரும்பாத யாழ்ப்பாண வைபவமாலையும் சிங்கள ஆட்சியைக் கொடுங்கோலாட்சியாகச் சித்திரித்திருக்கலாம்.

யாழ்ப்பாணச் சமூகத்தின் வேளாள உயர்மட்டத்தினர் பழம் பெருமை பேசும்போது தென்னிந்தியாவிலிருந்து வந்த தம்முன்னோராகிய குடும்பங்கள் சிலவற்றின் உயர்வையும் தூய்மையையுமே வியந்து பேசுகின்றனரென்பது உண்மையே. அந்தக் குடும்பங்கள் சிங்கை ஆரிய மன்னன் அழைப்பின் பேரிலே, யாழ்ப்பாணத்துக்கு வந்தனவென யாழ்ப்பாண வைபவமாலையும் கைலாயமாலையும் கூறியுள்ளதைப் பாவலர் சுட்டிக்காட்டியுள்ளார். இக்குடும்பங்கள் ஏறத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாழ 650 ஆண்டுகளுக்கு முன்பு (650+80=730 ஆண்டுகளுக்கு முன்பு) வந்தனவெனப் பாவலர் இன்னொரு சந்தர்ப்பத்திலே கூறியுள்ளார். பாவலர் இந்த ஆண்டுக்கணக்கை எப்படி எட்டினார் என்பதை விளங்கிக்கொள்ள முடியவில்லை இக்கால ஆராய்ச்சியாளர் யாழ்ப்பாண அரசு தோன்றியதாகக் கூறும் பதின்மூன்றாம் நூற்றாண்டுக்குப் பாவலரின் அக்காலக் கணிப்பு இட்டுச் செல்வது வியப்பாக இருக்கிறது. பதினான்காம் நூற்றாண்டிலே, தென்னிந்தியாவிலே பிரபலமான தமிழ்க் குடும்பங்கள் சில, யாழ்ப்பாண இராச்சியத்திலே வந்து குடியேறியிருக்கலாம். தமிழ்நாட்டு வரலாற்றிலே, அந்த நூற்றாண்டு இருண்ட காலமாகும். முஸ்லீம் படையெடுப்பினாலே பேரழிவுக்குள்ளான தமிழ்நாடு, சுமார் அரைநூற்றாண்டு காலம் மதுரைச் சுல்தான்களால் ஆளப்பட்டபோது, இந்துக்கள் பெருந்துன்புறுத்தலுக்குள்ளாயினர். விஜயநகரப் பேரரசு தமிழகத்திலிருந்து முஸ்லீம் ஆட்சியை அகற்றியபோது, எல்லா மட்டங்களையும் சேர்ந்தவர்களாகப் பெருந்தொகையான தெலுங்கர்களும் கன்னடியர்களும் தமிழ்நாட்டுக்கு வந்துசேர்ந்ததால், தமிழர் துன்பம் ஓரளவு தொடர்கதையாயிற்று. இத்தகைய குழப்ப காலத்திலே, தமிழர்கள் நிறுவியிருந்த யாழ்ப்பாண இராச்சியத்துக்குப் பிரபலமான தமிழ்க் குடிகள் சில குடிபெயர்ந்தமை பொருத்தமானதே. யாழ்ப்பாணத்தவரின் நாட்டுப் பற்று விரிவடைந்து இக்காலத்துக்கு ஏற்புடைய தேசிய இன உணர்வாக முகிழ்க்க வேண்டுமென்று பாவலர் கூறியது சிறப்பானது.

யாழ்ப்பாண மக்களின் உடல்நிலை பற்றிய பாவலரின் கருத்துகள் கவனிக்கத்தக்கன:

1. பழைய காலங்களில், ஏன் 50 அல்லது 60 ஆண்டுகளுக்கு முன்புவரைகூட, முழுக்க முழுக்க வேறுவகையான மக்கள் யாழ்ப்பாணத்திலே வாழ்ந்ததாகத் தெரியவருகிறது. எமது முன்னோரின் அசாதாரணமான உடற்பலம், அவர்கள் குறைபடாத நீண்ட ஆயுள் பெற்றமை,

பிரிவு
நகர நூலக சேவை
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்குக் கிடைத்த நோயற்ற அல்லது நோய் மிகக் குறைந்த வாழ்வு ...... எமது முன்னோரின் சுகம், பலம், உயிர்த்துடிப்பு முதலியன நம்புவதற்கரியன. மைந்தன் தந்தையிலும் பலவீனமாகவும் தந்தை தந்தையிலும் மிகவும் பலவீனமாகவும் காணப்படும் உடல்நலக் குறைவு என்ற துயர் தொடர்ந்து செல்கிறது.

2. பரம்பரையாக வந்த அவர்களின் உயிர்த்துடிப்பு, வறண்ட நிலத்திலிருந்து நம்பியிருக்கமுடியாத விளைவைப் பெறுவதற்காக உடலை வருத்தியுழைக்கவேண்டிய நிலையில் அவர்கள் பெற்ற கடுமையானதும் தொடர்ச்சியானதுமான உடற்பயிற்சி, இக்காலத்திலே பரவியிருக்கும் பாவச் செயல்கள் அக்காலத்திலே இல்லாத நிலையிலே, அவர்களுடைய எளிமையான பழக்க வழக்கங்கள் என்பன அவர்களுக்கு வலுவான உடற்கட்டையும் திறமான சுக நிலையையும் பாரம்பரியமாக உதவின.

3. எமது மக்கள் தமது எளிமையான பழக்கவழக்கங்களை விட்டு மேனாட்டுக்குரியவையை ஏற்றுக்கொள்ளும்போது ... .. , குரக்கன், வரகு, ஒடியல் என்பனவும் அவற்றில் இருந்து ஆக்கப்படும் உணவு வகைகளும் வெறுப்புடன் குறிப்பிடப்படும்போது, மேனாட்டு விலைமிக்க 'உணவு' வகைகளும் வெறிமிக்க மதுசாரங்களும் நம்நாட்டுச் சுதேசியக் கள்ளுடனும் சாராயத்துடனும் சேர்ந்துவிட்ட போது, விவசாயம் கௌரவமில்லாத தொழிலாகக் கருதப்படும்போது..........

4. பழங்காலத்து எமது பெண்கள், உயர்வகுப்பினராகவோ தாழ்வகுப்பினராகவோ இருந்தபோதும், வீட்டுவேலைகள் யாவற்றிலும் முக்கிய பங்கெடுத்ததுமன்றி, வயல்வேலைகளிலே தமது கணவருக்கும் உதவிவந்தனர். அவர்கள் செய்த வேலை அவர்களுக்கு நிறைய உடற்பயிற்சியாக அமைந்ததால், அவர்கள் வலுவுள்ளவர்களாகவும் வலுவுள்ள சௌக்கியமான குழந்தைகளின் சௌக்கியமுள்ள தாய்மார்களாகவும் அமைந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. பெண்கள் ஆண்களுக்குச் சரிசமமாக இருக்கவேண்டு மென்ற தவறான முயற்சி காரணமாக, கடுமையான படிப்பின் காரணமாகவும் ...... ஒழுங்கான, தேவையான அளவு உடற்பயிற்சியின்மையாலும் ..... மனைவியராகவும் தாய்மாராகவும் இருப்பதற்குத் தகுதியற்றவராக, அவர்கள் வெளிவருகின்றனர்.

6. வெள்ளைக்காரர் உடலின் தேவைக்கேற்ற முறையில் உணவைச் சரிசெய்தும் தவறாது ஒழுங்கான உடற்பயிற்சி பெற்றும் ......

7. உடல்நலத்தைப் பேணுவதற்கு, ஒரு சங்கம் இனிமேலும் தாமதியாமல் தொடங்கப்படுதல் வேண்டும் ...... கல்வித் துறை தன்னுடைய சக்திகளைச் செலுத்துவதற்கு இது மிகச் சிறந்த வாய்க்காலாகும்.

குறிப்புரை அதிகம் கூறாமலே, பாவலருடைய இந்தக் கருத்துகளை உங்கள் கவனத்துக்கு விட்டுவிடலாம். அவருடைய காலத்தின் பின் நிலைமை அதிகம் மாறிவிட்டதென்று கூறமுடியாது. என்னுடைய இளமைக் காலத்திலும் — சுமார் இருபத்தைந்து, முப்பது ஆண்டுகளுக்கு முன்பு — இதே கருத்துக்களை அக்கால முதியோர் சிலர் கூற, நான் கேட்டிருக்கிறேன். இனம் சந்ததிசந்ததியாகப் பலவீனப்பட்டுக்கொண்டு வருகிறதென்பதிலே ஓரளவு உண்மையுண்டாயினும், முந்திய சந்ததியினர் யாவரும் எப்பொழுதும் நல்லாக இருந்தார்கள் என்பது உண்மையல்ல என்று இன்றைய ஆராய்ச்சியாலே தெரியவருகிறது. பாவலரிடமும் 'பண்டைக்காலத்திலே பொற்காலம் இருந்ததென்ற மனப்போக்கு' காணப்பட்டதென்றே கொள்ள வேண்டியிருக்கிறது. அது எவ்வாறாயினும், தமிழரிடையே உடல்நலம் பேணுவதற்கு அமைப்பு ரீதியாக முயற்சி செய்தல் மிகவும் விரும்பத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து, அறிவுவளர்ச்சிபற்றிய பாவலரின் கருத்துக்களை நோக்கலாம்:

1. பெருந்தொகையான பாடசாலைகள், பெருந்தொகையான பாடசாலை ஆசிரியர்கள், பெருந்தொகையான விதிகளும் கட்டுப்பாடுகளும், என்றும் சிந்திக்கப்படுவதும் என்றும் தவறாக உள்ளதுமான கல்வி முறையின் ஏனைய துணையுறுப்புகள் — இவை யாவும் இருந்தும் இன்றைய கல்விமுறை கற்றவர்களும் பரந்த மனமுடையவர்களும் என்று உண்மையாகக் கூறக்கூடியவர்களைத் தோற்றுவிக்கவில்லை.

2. கல்விமுறையின் முக்கியமான இயல்பு மனனஞ்செய்தல், மனனஞ்செய்தல், மனனஞ்செய்தலே.

3. எமது பையன்கள் தங்களுக்கு ஈடுபாடுள்ள பாடங்களையோ, விருப்பமான தொழில்களையோ பயிற்றப்படுவதில்லை. எங்களுடைய கல்வி நிலையங்களுட் பல, மாணவர் பரீட்சையிலே சித்தியெய்தும் கலையைப் பயிற்றும் வணிக நிலையங்களே.

4. ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுகால ஆங்கிலக் கல்வியின் பின்னும், எங்களிடையே இன்னும் ஒரு பெரிய சிந்தனையாளர், ஒரு பெரிய கவிஞர், ஒரு பெரிய பேச்சாளர், ஒரு பெரிய கலைஞர் அல்லது ஒரு பெரிய இசையாசிரியர் தோன்றவில்லை.

பாவலருடைய கருத்துக்கள் இன்றைய நிலையிலும் பொருத்தமானவையாக உள்ளன. தமிழ்மொழி மூலம் கல்வி என்பது பாடசாலைகளிலே அமுல் நடத்தப்படுவது தவிர, நிலைமை முன்பு போலவே காணப்படுகிறது. படித்தவர்கள் ஏற்ற தொழில் பெற முடியாமலிருப்பதனால், யாழ்ப்பாண இளைஞர் தொழில்முறைக் கல்வியையே பயில முனைகின்றனர். தொழில்முறைக் கல்விக்கு மாணவர்கள் தெரிவாவதை இலகுவாக்குவதற்கு, மாணவர்கள் மிகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருந்தொகையான புள்ளிகளைப் பெற்றுப் பரீட்சையிலே சித்தியெய்த உதவும் நூற்றுக்கணக்கான தனியார் கல்வி நிலையங்கள் யாழ்ப்பாணத்தின் எல்லாப் பகுதிகளிலும் தோன்றியுள்ளன. 1970 இலிருந்து, இலங்கை அரசாங்கங்கள் யாழ்ப்பாணத் தமிழர் தொழில்முறைக் கல்விப்பீடங்களுக்குத் தெரிவாவதை மட்டுப்படுத்துவதற்கு ஏதாவது ஒரு வழியிலே முயன்று வருகின்றன. நாட்டிலே இன்று காணப்படும் குழப்பநிலைக்கு, தமிழ் இளைஞர்களின் விரக்தியும் ஒருமுக்கியமான காரணமாகும்.

பெண்கல்விபற்றியும் பாவலர் சில கருத்துகளைத் தெரிவித்துள்ளார்:

1. பண்டைக்காலத்திலே இந்துப் பெண்கள் அறிவு விருத்தியில் மிகவும் உயர்நிலை அடைந்திருந்ததற்கு எமது இலக்கியத்திலே நிறையச் சான்றுகள் கிடைக்கின்றன. ஐரோப்பிய அறிஞர்களிடமிருந்துகூட மிகவும் உயர்ந்த பாராட்டுதல்களைப் பெற்றுள்ள தகுதி மிக்க கவிதை நூல்களை எழுதியுள்ளவரும் தமிழ்கூறும் நல்லுலகிலே வீடுதோறும் பெயர் அறியப்பட்டுள்ளவரும் தூய தமிழரும் பிரபல தமிழ்ப் பெண்புலவருமான ஔவையார் ...... எமது புகழ்மிக்க தமிழ்ப் பெண்புலவருக்கு இணையாகச் சொல்லக்கூடிய பெண்புலவரை ஐரோப்பிய நாடு எதனிலும் காணமுடியுமென்று நான் கேள்விப்படவில்லை.

2. எமது பெண்கள் எமது பையன்கள்போல எல்லாவகையிலும் சமத்துவமான அறிவுப்பயிற்சி பெறவேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்து வேறுபாடு இல்லாத பெண் கல்வியை வற்புறுத்தி வழக்காடுவோர் எம்மிடையே உண்டு. எமது பெண்கள் தமது உடலைப் பலவீனப்படுத்துவது நல்லதா என்று எனக்குத் தெரியவில்லை.

3. எமது பெண்களுக்கு வேண்டியது தமிழ் இலக்கியத்திலும் ஆங்கில இலக்கியத்திலும் ஆழமான அறிவும் சங்கீத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழி, மனையியல், அடிப்படைக் கணிதம், அடிப்படை அறிவியல், தையல்வேலை, இசை, மனைமருத்துவம் என்பனவற்றிலே நல்ல அறிவும் மட்டுமே என்பது எனது அபிப்பிராயம். எமது பெண்கள் இலட்சியத் தாய்மாராக வருவதற்கு நாம் எல்லாவகை முயற்சியையும் செய்ய வேண்டும்.

எமது பெண்களை மெல்லியராகவும் வல்லவராகவும் வைத்திருப்பதற்குப் பாவலர் கூறும் வழிமுறைகள் சிறிது சிந்தனைக்குரியன; ஆனால், பெண்கல்விக்குப் பிறிதொரு கல்வி விதானம் பற்றிய அவருடைய கருத்துகள் இக்காலச் சூழ்நிலைக்கு ஏற்றனவல்ல. முற்காலத்திலே ஆண்களுக்கே உரியதென்று கருதப்பட்ட கல்வியிலே இன்று பெண்கள் முழுமூச்சாக ஈடுபடுகின்றனர். உண்மையில், இன்று பாடசாலைகளிலும் பல்கலைக் கழகங்களிலும் ஆண்களுக்குப் பெண்களுடன் போட்டியிட்டு வெல்வது சிரமமாக இருக்கிறது. உதாரணமாக, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலே மாணவிகள் தெளிவான பெரும்பான்மையாக உள்ளனர். ஆனால், பாவலரின் கருத்துக்களின் எதிரொலி, அவருடன் சமகாலத்திலும் அவருக்குப் பின்பும் வாழ்ந்த வி. கலியாண சுந்தர முதலியாரின் "பெண்ணின் பெருமை" என்ற நூலிலே காணப்படுகிறது. ஔவையார் தூயதமிழர் என்று பாவலராற் கூறப்பட்டுள்ளமை கவனிக்கத்தக்கது. பிராமணர் அல்லாதார் என்ற பொருளிலேயே, தூய தமிழர் என்ற தொடர் வழங்கப்படுகிறது. பாவலர் காலத்தவரான மறைமலையடிகள் தனித்தமிழியக்கம் தொடங்கினர். பாவலர் காலத்துக்குப்பின் தமிழ்நாட்டிலே, நீதிக் கட்சி, சுயமரியாதை இயக்கம், திராவிடக் கழகம் என்பன தோன்றவேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. பாவலர் நோக்கிலே, இவற்றின் தோற்றத்துக்கு முன்னோடியான ஒரு முனை காணப்படுகிறது.

பாரம்பரியத் தமிழ்ப் புலமையிலே, ஒரு பெருங் குறையைப் பாவலர் சுட்டிக்காட்டியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. புலவர், பண்டிதர், வித்துவான், வித்துவசிரோமணி முதலிய உயர்பட்டங்களைப்பெற்று மகிழ்பவர்களும் எமது தாய்மொழியிலே ஆழமான அறிவுபெற்றுள்ளவர்களாகக் கூறிக்கொள்பவர்களுமான இவர்கள் தமிழிலோ, தமிழ் பற்றியோ எழுதும்போது மூலமான புதுக் கருத்து எதுவும் காணப்படுவதில்லை.

2. மகாபாரதம் அல்லது இராமாயணத்தின் பகுதிகளுக்கு அல்லது பல புராணங்களிலே ஒன்றுக்கோ மற்றதுக்கோ உரையெழுதுவது அல்லது அந்தாதி, குர்மி முதலியன பாடுவதே இவர்கள் முயலும் மிகப்பெரிய பணியாகும். தமிழ் கற்றவர்கள் தமிழிலே மூலநூல்கள் எழுதவேண்டும்.

3. தமிழ் உரைநடை நூல்கள் குறைவாக இருத்தலினால்' தமிழ் அறிஞர்கள் உரைநடை நூல்கள் எழுதி அக் குறையை நீக்கி தமிழ்மொழிக்கு நிலையான தொண்டு செய்யவேண்டும். தமிழிலே மூலநூல்களைத் தோற்றுவித்தற்குப் பிரதேசத் திறமையைத் தூண்டுவதை நோக்கமாகக் கொண்ட ஒரு செல்வாக்குள்ள கழகம் நிறையச் சாதிக்கலாமென நான் நம்புகிறேன்.

இந்தக் குறை இன்றுவரையிலே தொடர்ந்து வந்துள்ளது. தமிழ்ப் பாரம்பரியக் கல்விப் பாடவிதானம் இறந்த மொழிகளுள் ஒன்றான சங்கதமொழியின் பாடவிதானத்தைத் தழுவி அமைக்கப்பட்டுவருகிறது. வாழும் மொழி ஒன்றுக்கான பாடவிதானம் இறந்த மொழி ஒன்றுக்கான பாடவிதானத்திலிருந்து வேறுபட்டதாக அமையவேண்டும். பாவலர் விரிவுரை நிகழ்த்திய காலத்திற்குப்பின் தமிழ் உரைநடை பெருவளர்ச்சி பெற்றுள்ளது. ஒரு மொழியோ. அல்லது ஒரு மொழியின் உரைநடையோ, வெறும் வெளியிலே வளர்ச்சியடையமுடியாது. இந்தியாவிலும் இலங்கையிலும் தமிழ் தேசிய மொழியாக இருப்பதனாலும் தமிழ்நாட்டிலும் சிங்கப்பூரிலும் அது உத்தியோக மொழியாக இருப்பதனாலும், தமிழ் பல்வேறு காரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யங்களுக்குக் கோடிக்கணக்கான மக்களாலே பயன்படுத்தப் டடுவதால், மொழியில் வளர்ச்சி காணப்படுகின்றது. தமிழ் மொழியில் வளர்ச்சி காணப்படுகின்றது. தமிழ்மொழியில் வெளியாகும் தரமான நூல்களுக்குப் பரிசுகள் வழங்கும் திட்டம் ஒன்று இலங்கை அரசினூலே தொடங்கப்பட்டது. 1965 இலிருந்து 1977 வரை பரிசுகள் ஒழுங்காக வழங்கப் பட்டுவந்தன. 1978 இல் இலங்கை அரசியல் யாப்பிலே தமிழின் அந்தஸ்து உயர்ந்தது. தமிழ்மொழியின் உயர் வுக்காக நீண்ட காலமாகக் குரல்கொடுத்துவந்த அரசியல் வாதியொருவர் தமிழ்மொழி அமுலாக்கல் அமைச்சராக நியமிக்கப்பட்டார். அந்த ஆண்டிலிருந்து தமிழ் நூல் களுக்கான பரிசுகள் இடையிடையேதான் வழங்கப்படுகின் றன. அச்சகச் செலவுகளின் அதிகரிப்பு உட்படப் பல்வேறு காரணங்களால், இலங்கையிலே தமிழ் நூல்களின் வெளி யீடு வெகுவாகக் குறைந்துவிட்டது. இந்த நாட்டிலே தமிழ் நூல்களை எழுதுவோர் தமிழ்நாட்டிலே தம்முடைய நூல் வெளியாவதற்கான ஒழுங்குகளைப் பெரும்பாலும் செய் கின்றனர். இலங்கையிலிருந்து தமிழ்ப் புத்தகங்கள் இறக்கு மதியாவதற்கு இந்தியா விதித்துள்ள கட்டுப்பாடுகளைத் தளர்த்தினூல், நிலைமை சீர்திருந்தக்கூடும். மேலும் தமிழ் நாட்டிலுள்ளதுபோல, இலங்கையிலும் அரசு ஒவ்வொரு வெளியீட்டிலும் நூற்றுக்கணக்கான பிரதிகளை விலை கொடுத்து வாங்கி நாட்டிலுள்ள நூல்நிலையங்களுக்கு விநி யோகிக்கலாம். இந்தக் கொள்கை இலங்கையிலுள்ள நூலாசிரியர்களையும் வெளியீட்டாளர்களையும் ஊக்குவிக் கும். இலங்கை அரசும் ஆண்டுப் பரிசுகளை ஒழுங்காக வழங்கிவருதல்வேண்டும்.

யாழ்ப்பாண விவசாயம் தற்காலத்து முறைகளைக் கையாளவேண்டுமெனவும் கைத்தொழில் மயமாக்கம் நிகழ வேண்டுமெனவும் பாவலர் வேண்டியுள்ளார்:

1. முந்திய காலத்துக் கைத்தொழில்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, யாழ்ப்பாணத்துக் கைத்தொழில்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைந்துள்ள முன்னேற்றம் மிகச்சிறியது. எமது மக்களின் விடாமுயற்சி, நமது முன்னோர் கற்பனை செய்து கூடப் பார்க்காத உலகின் கோணங்களுக்கெல்லாம். எம்முடைய இளைஞர்களைக்கொண்டு சென்றபோதும், எம்முடைய கைத்தொழில்கள் முன்னேறவில்லை.

2. ஆனால், எமது விவசாயிகள் தம்முடைய சொந்தப் பூர்வீக நீர்ப்பாசன முறைகளைத் தொடர்ந்து பின்பற்றி வருகின்றனர். எமது மக்களிடையே ஏனைய எல்லாத் தொழில்களிலும் அதே பழைமைபோற்றும் பண்பு காணப்படுகிறது. காலம் செல்லச்செல்ல, கற்ற இளைஞர் தொகை வெகுவேகமாகக் கூடிவருவதனால், அரசாங்க சேவையிலே சேர்வதற்கு மிகவும் ஆர்வமுடைய இளைஞர் எமது நாட்டிலே நிறைந்து காணப்படுவர். எமது இளைஞர்களின் எதிர்காலம் எமது சொந்தத் தோட்டங்களிலும் தொழிற்சாலைகளிலுமேயன்றி, மலேசியா, சிங்கப்பூரில் இல்லை.

3. யாழ்ப்பாணத்து ஒரு தனிச் செல்வந்தர் ஒரு தொழிற்சாலையைத் தொடங்குவதென்பது முடியாத காரியமாய்த் தோன்றலாம்; ஆனால் யாழ்ப்பாணத்தவர் யாவரும் மனமார இணைந்தால், பலபொருட்களை ஆக்கவல்ல தொழிற்சாலைகள் தொடங்கலாம்.

*யாழ்ப்பாணத்தைத் தொழில் மயமாக்கல் என்ற பாவலரின் கனவு நனவாகவில்லை. அண்மைக்காலம்வரை அரசாங்கத் தொழிலுக்காக முயல்வோர் தொகை அதிகரித்தே வந்தது. பெரும்பான்மைச் சமூகத்தின் ஆதிக்கத்துக்குட் பட்ட இலங்கை அரசாங்கங்கள் அரசாங்கத் தொழில்கள் தமிழருக்குப் போய்ச் சேருவதை மேன்மேலும் கட்டுப்படுத்திவந்தன. நாட்டில் நிலவும் இன்றைய குழப்ப நிலைக்கு இதுவும் ஒரு காரணமாகும். யாழ்ப்பாணம் தொழில்மயமாகியிருந்திருந்தால், தமிழர்கள் பெருந்தொகையானோர் தொழில் தேடித் தென்னிலங்கைக்குப் போயிருந்திருக்க வேண்டியதில்லை. முக்கியமான அரசியற்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்சிகள் வகுப்புவாத அரசியலைக் கைக்கொண்டிருக்க வேண்டியதில்லையாதலால், எமது தீவின் வரலாறு வேறுவகையாக அமைந்திருக்கக்கூடும்.

தமிழ் இளைஞர் உலகின் பல்வேறு பகுதிகளுக்கும் போவதைப்பற்றிப் பாவலர் கூறுகிறார். பூமியிலே எங்கெங்கே நுழையக்கூடிய இடங்களுண்டோ, அங்கங்கெல்லாம் இலங்கைத் தமிழ் இளைஞர்கள் நுழைந்து உலகமெல்லாம் பறந்து காணப்படும் இன்றைய நிலையைப் பாவலர் கற்பனைசெய்து பார்த்திருக்கக்கூடும் என்று நான் நம்பவில்லை இன்றைய நிலை ஒரு தற்காலிக நிலையேயென்றும் இலங்கைத் தமிழ் இளைஞர்களுட் பெரும்பாலோர் தாய் நாட்டுக்குத் திரும்பிவந்து கௌரவத்துடனும் காம்பீர்யத்துடனும் வாழும்நிலை ஏற்படுமென்றும் நம்புவோமாக. தமிழ் இளைஞர்கள் தமக்கு ஏற்பட்ட வெளிநாட்டுக் கட்டாயத் தங்குகையை நன்கு பயன்படுத்திப் புதிய கலைகளும் புதிய தொழில் நுட்பங்களும் பயின்று, தாம் திரும்பி வந்ததும் தமது தாய்நாடு புத்துயிரும் புத்துணர்ச்சியும் பெற்றுத் தலைநிமிர்ந்து நிற்க உதவுவாராக.

கடைசியாக, பாவலரின் சமூக சீர்திருத்தம்பற்றிய சிந்தனைகளை நோக்குவோம்!

1. எமது முன்னோர்களின் பழக்கவழக்கங்கள் பெரும்பாலும் இந்துசமயத் தொடர்புடையன நாட்டில் மாறிமாறி ஏற்பட்ட ஐரோப்பியராட்சியினாலும் சிங்கள மக்களோடு தொடர்பு கொண்டும் கலந்தும் வாழ்ந்தாலும், பழக்கவழக்கங்கள் பாதிக்கப்பட்டு, தமது பண்டைய தூய்மையை இழந்து சந்தர்ப்பங்களுக்கு ஏற்றபடி மாறியும் மாற்றப்பட்டும் வந்துள்ளன.

2. பொதுப் பெயர்களாகிய வேலு, முருகர், கந்தர், ஐயம்பிள்ளை முதலியனவற்றுக்குப் பதிலாக, வித்தியாசமான மாறிவிட்ட பழக்கங்கள், உடையில் மிகமிகப் புதிரான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறுபாடு, ஒரு பிறநாட்டுமொழி... ...கரேல், அன்டர் வுட், ஹரிங்டன், ஸ்பென்சர் முதலிய பிறநாட்டுப் பெயர்கள் அல்லது தமிழுக்கு முற்றிலும் அந்நியமான பெயர்களை அவர் எங்கும் கேட்பார்.

3. எம்முடைய மிகத்திறமான தேசியப் பழக்க வழக்கங்களை அப்படியே கைவிட்டு, ஐரோப்பியாது வினைத்தையும் குருட்டுத்தனமாகப் பின்பற்றுவதை நான் கண்டிக்க விரும்புகிறேன். உதாரணமாக, தூய சுகாதார விதிகளின் அடிப்படையிலே தோன்றியதாகிய மரண ஊர்வலத்திலே பங்குபற்றித் திரும்பியதும் குளிக்கின்ற வழக்கம் மிகச் சிறந்த சமூக வழக்கமாகும்.

4. எமது இளைஞர்களும் இளம்பெண்களும் தமது நாட்டு உண்மையாகச் சிறந்த வழக்கிலே பெருமை கொள்ளும்படி பயிற்றுவிக்கப்படவேண்டும். ஐரோப்பியாது வழக்கர் ஒவ்வொன்றையும் பைத்தியம் போலத் தேடியோடி நாகரிகமற்ற மக்கள் இனம் ஒன்றன் பரம்பரையென்ற முற்றிலும் பொருத்தமில்லாத இழிவுரையை அவர்கள் பெற்றுவிடக்கூடாது.

5. யாழ்ப்பாணத்திலே ஒரு சமூக சீர்திருத்தச் சங்கம் அத்தியாவசியமானது. சமயக் கோட்பாடு என்ற நிலையை முற்றிலும் விலக்கியதாய், இனம் முழுவதையும் தழுவிக் கொள்ளக்கூடியதாக அமைந்த சமூக சீர்திருத்தமே வெற்றிபெறும்.

பாவலர் முதலிலும் இறுதியிலும் ஒரு சமூக சீர்திருத்த வாதியென்றே கொள்ளத்தக்கவர். மேலே காட்டப்பட்ட மேற்கோள்களிலிருந்து சமூக சீர்திருத்தத்திலே பதிந்திருந்த அவருடைய கவனம் தெளிவாகப் புலப்படும். தமிழ்த் தேசிய இனத்தின் தனித்துவம் அவர் பார்வைக்குத் தெளிவாகப் புலப்பட்டதனால், எந்த ஒரு சமயத்தைப் பின்பற்றுபவர்களுக்கு மட்டுமல்லாது, முழுச் சமூகத்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் பொருத்தமானதாகச் சமூக சீர்திருத்தம் அமைய வேண்டுமென்று விரும்பினர். இனத்து இயல்புகள் யாவற்றையுங் கைவிட்டு ஐரோப்பிய மயமாக்கலுக்கு முழுவதாக ஆட்பட்டவரை ஐரோப்பியர்கூட மதிப்பதில்லை. அத்தகையோரின் முன்னோரை ஐரோப்பியர் மிகக் கேவலமானவர்களாகக் கருதுகிறார்களெனப் பாவலர் கூறியது மிகவும் சரி. ஆங்கிலங் கற்று, நிறம் தவிர மற்றெல்லாவற்றிலும் ஆங்கிலேயர்போல வாழ்ந்து, இங்கிலாந்துக்குப் போய்த் தங்கித் திரும்பியோர் சிலர் தீவிர தேசியவாதிகளாக மாறிய இரகசியம் இதுதான். கிறீத்தவத்துக்கு மதம் மாறியவர்களுட் சிலர் இத்தகைய அனுபவத்தாலே, உரோசமுள்ளவர்களாக இந்துசமயத்துக்குத் திரும்பி வந்தனர். பாவலரும் இத்தகையோருள் ஒருவரே. பண்டைப் பெருமை எதிர்காலச் சிறப்புக்கு வழிகாட்டவேண்டுமென்று பாவலர் விரும்பினர். கடந்த காலத்திலும் நிகழ்காலத்திலும் காணப்படும் சிறப்புகளைக் கைவிடாது, எதிர்காலத்தை நோக்கி முன்னேற வேண்டுமென்பது, அவர் விருப்பமாகும். தெல்லிப்பளை மிஷன் பாடசாலையிலே காணப்பட்ட சூழ்நிலையிலே, அவர் கருத்துகளுக்கு ஆதரவு கிடைக்கவில்லை.

சந்தேகமில்லாமல், பாவலர் தெ. அ. துரையப்பா பிள்ளை ஒரு பெரிய "யாழ்ப்பாணத்தவர்" ஆவார். இந்தக் கட்டுரையைப் பார்த்தபின்பு, அவர்மேல் எனக்குள்ள மரியாதை எவ்வளவோ உயர்ந்துவிட்டது. அவருடைய கருத்துகளுட் பல, இன்றைய நிலையிலும் ஏற்புடையனவே. அவருடைய மிகச் சிறந்த சிந்தனைத் தொகுதியொன்றிலிருந்து மேற்கோள் காட்டவும் குறிப்புரை கூறவும் சந்தர்ப்பங் கிடைத்தமை ஒரு பெரும் பாக்கியமென்றே நான் கருதுகிறேன்.

மஹாத்மா அச்சகம், ஏழாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org